# ESOL 2007 செப்டம்பர் பயிற்சி வகுப்புகள் -- முக்கிய தகவல்கள்

நீங்கள் ESOL வகுப்பில் சேர விரும்பினால், உங்களுக்கு அருகில் உள்ள மையத்திற்கு அல்லது கல்லூரிக்குச் சென்றோ அல்லது தொலைபேசியில் அழைத்தோ எவ்வாறு விண்ணப்பிப்பது என கண்டறிந்து கொள்ள வேண்டும்.

ESOL வகுப்புகள் மிகவும் பிரபலமானவை. அதனால் நீங்கள் காத்திருப்போர் பட்டியலில் இருக்க நேரிடலாம்.

## அதற்கு எவ்வளவு செலவாகும்?

**நீங்கள் (அல்லது உங்களின் துணைவர்) கீழ்கண்ட சலுகைகளில் ஏதேனும் ஒன்றைப் பெற்றுக் கொண்டு இருந்தால், உங்களுக்கு ESOL வகுப்புகள் இலவசமானவை.**

ஜாப் சீக்கர்ஸ் அலவன்ஸ் (JSA)
கவுன்சில் டாக்ஸ் பெனிஃபிட்
ஹவுஸிங் பெனிஃபிட்
இன்கம் சப்போர்ட்
வொர்க்கிங் டாக்ஸ் கிரெடிட் (15,050 பவுண்டுகளுக்குக் குறைவாக வருமானம் இருந்தால்)
பென்ஷன் கிரெடிட் (உத்திரவாத கிரெடிட் மட்டுமே)

**அல்லது மேற்கண்ட உதவி பெறுவோர்களைச் சார்ந்திருப்பவராக இருந்தால்**
**அல்லது நீங்கள் ஒரு சமுதாய குற்றவாளியாக இருந்தால்**
**அல்லது நீங்கள் 16-18 வயதுடைவராக இருந்தால்**

நீங்கள் என்ன உதவி பெறுகிறீர்கள் என்பதற்கான ஆவணங்களைக் கொண்டு வர வேண்டும்.

நீங்கள் வேலையில் இருந்தால், உங்கள் அருகில் உள்ள கல்லூரி நீங்கள் எவ்வளவு பணம் கட்ட வேண்டிவரும் என்பதைக் கூறுவார்கள்.

நீங்கள் உதவி எதுவும் பெறாதவறாகவோ, வேலை ஏதும் இல்லாதவறாகவோ இருந்தால்,
**அல்லது**
ஒரு ஆண்டுக்கு உங்களின் வருமானம் 15,050 பவுண்டுகளுக்குக் குறைவாக இருந்தால், உங்கள் உள்ளூர் கல்லூரி உங்களின் கட்டணத்திற்கு உதவ முடியும்.

இதனைக் காண்பிக்க தகுந்த பத்திரங்களைக் கொண்டு வரவும்,
எடுத்துக்காட்டாக வருமான சீட்டுகள், P60, மற்ற வரி படிவங்கள்

**உதவிகளுக்கு நீங்கள் விண்ணப்பிக்க விரும்பினால்:**

- உங்களின் உள்ளூர் ஜாப் சென்டர் ப்ளஸ் அலுவலகத்துக்குச் செல்லவும்.

ஒரு நேஷனல் இன்சுரன்ஸ் நம்பர் பெற விண்ணப்பிக்க 0845 600 0643 என்ற தொலைபேசி எண்ணில் அழைக்கவும் அல்லது உங்களின் உங்களின் உள்ளூர் ஜாப் சென்டர் ப்ளஸ் அலுவலகத்துக்குச் செல்லவும்.

ESOL Course Information

# முக்கிய தகவல்கள் - காலேஜ் வகுப்புகளுக்கான தகுதி

மேலும் தகவல்களுக்கு காலேஜுடன் தொடர்பு கொள்ளவும்.

எங்களின் சில பயிற்சி வகுப்புகள் 'முழு கட்டணம்' கொண்டவை, அதாவது நீங்கள் எல்லா கட்டணங்களையும் செலுத்த வேண்டும்.

மீதமுள்ள பயிற்சி வகுப்புகள் லேர்னிங் அண்ட் ஸ்கில்ஸ் கவுன்சிலால் (LSC)-யால் மானிய தொகை அளிக்கப்படுபவை. நீங்கள் சிறிது கட்டணம் செலுத்தத் தேவைப்படலாம் அல்லது அந்த பயிற்சி வகுப்புகள் இலவசமானதாகவும் இருக்கலாம். இதனைக் கண்டறிய நீங்கள் உங்களின் உள்ளூர் கல்லூரியினை தொடர்பு கொள்ள வேண்டும். அவர்களுக்கு ஒரு இனைய தளம் இருக்கலாம் அல்லது ஒரு சேர்க்கை தொலைபேசி எண் இருக்கலாம், அல்லது நீங்கள் அவர்களை நேரில் சென்று காண தேவையாக இருக்கும்.

கீழ்கண்ட அட்டவணை, LSC-யால் நிதி பெறும் தகுதி பெறும் குழுக்களைக் காட்டுகிறது.

அவை எல்லா நிலைகளையும் உள்ளடக்கியவை அல்ல. உங்களின் உள்ளூர் கல்லூரி உங்களின் நிலைமைக்கு ஏற்ப உங்களுக்கு அறிவுரை அளிக்கமுடியும்.

| LSC நிதி உதவி பெறக்கூடிய பயிற்சிகளுக்கான தகுதிகள் | அத்தாட்சிக்கான எடுத்துக்காட்டுகள் |
|---|---|
| பிரிட்டிஷ் பிரஜைகள் | UK அல்லது வடக்கு ஐயர்லாந்து பாஸ்போர்டுகள்<br>சர்டிபிகேட் ஆப் நேச்சுரலிசேஷன்<br>ஒரு பிரிட்டிஷ் பிரஜை என பதிவு. |
| UK-யில் 3 ஆண்டுகளாக வசித்து வருதல்<br>(அல்லது அவரது துணைவரோ அல்லது சிவில் பார்ட்னரோ UK-யில் ஒரு வருடமாக வசித்து வந்தால்) | UK-யில் *ரைட் ஆப் அபோட்* முத்திரை குத்தப்பட்ட பாஸ்போர்டுகள்<br>அல்லது *நாட்வறையறை இல்லாமல் நாட்டினுள் நுழைந்து அல்லது வசிப்பதற்கு* கொடுக்கப்பட்ட ஹோம் ஆபீஸ் கடிதம் |
| UK அரசாங்கத்தின் அகதி நிலைமை (அல்லது அவரது துணைவரோ அல்லது சிவில் பார்ட்னரோ அல்லது குழந்தையோ)<br>குறிப்பு 1-ஐ பார்க்கவும். | ஹோம் ஆபீஸ் ஆவணங்கள் |
| EU நேஷனல் அல்லது EEA MIGRANT ஊழியர் மூன்று ஆண்டுகளாக EEAவில் வசித்து வந்தால்<br>(அல்லது அவரது துணைவரோ அல்லது சிவில் பார்ட்னரோ அல்லது குழந்தையோ)<br>குறிப்பு 2-ஐ பார்க்கவும். | EU பாஸ்போர்ட் |

குறிப்புகள்:

1. அகதி நிலைக்கு மறுக்கப்பட்டவரையும் . ஆனால் செக்ரெடரி ஆப் ஸ்டேட்டால் மனிதாபிமான பாதுகாப்பு அல்லது டிஸ்கிரெஷியனரி லீவ் அல்லது UK அரசாங்கத்தால் சிறப்பு முறையில் நுழையவோ அல்லது தங்கி இருக்கவோ அனுமதிக்கப்பட்டவரையோ, அல்லது அவ்வாறு அங்கீகரிக்கப்பட்டு சாதாரணமாக குடியிருப்போராக UK யிலோ அல்லது தீவுகளிலோ தங்கி இருப்பவரையோ (அல்லது அவரது துணைவரோ அல்லது சிவில் பார்ட்னரோ அல்லது குழந்தையோ) இது உள்ளடக்கியதாகும்.

புகலிடம் கோரி விண்ணப்பித்து 6 மாதம் கழித்து அவர்களின் விண்ணப்பம் நடைமுறை செயல்பாட்டில் இருந்தாலும் அவர்கள் LSC நிதி உதவி அளிக்கும் பயிற்சி வகுப்புகளுக்கு தகுதியானவர்களாவார்கள்.

2. EEA என்பது இங்கே EU, ஐஸ்லாந்து, லிச்சின்ஸ்டென், ஸ்விட்சர்லாந்து மற்றும் நார்வே.